RTROP.No. – 139/2021 – 30.06.2023

CW1 – அன்வர்

2 முதல் 5 கோருநர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சேலம் ஜாமியா மஜீத்தில் முத்தவல்லியாக 9 வருடங்களாக இருந்து வருகிறேன். என்னை முத்தவல்லியாக வக்ப் போர்ட் நியமித்தது. சேலம் ஜாமியா மஜீத்துக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களிலிருந்து வரி வசூலித்து வக்ப் போர்டுக்கு செலுத்த வேண்டியது எனது கடமை என்றால் சரி. ஆர்ஜிதம் செய்யப்பட்ட சர்வே எண்.30/1 நிலத்திலிருந்து வசூல் செய்தது மாதிரியோ அல்லது அனுபவம் செய்தது மாதிரியோ காண்பிப்பதற்கு ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் அனுபவம் செய்ததற்கு பட்டா உள்ளது. மேலும் நான் சுவாதீனத்தில் உள்ளதற்கு கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றிதழ் Ex.C8 தாக்கல் செய்துள்ளேன். அது 15.3.2011 ல் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். Ex.C7 ஆவணமும் 15.3.2011 ல் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தையும் கிராம நிர்வாக அலுவலர்தான் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் சர்வே எண்.30/1 க்கு உண்டான பசலி–1417 முதல் 1423 க்காக எந்த பணமும் நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.30/1 நிலம் எனக்கு சம்மந்தம் இல்லாத நிலம் என்பதால் அந்த எண்ணை மட்டும் Ex.C7 ல் தனியாக

எழுதிக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. இனாம் ரிஜிஸ்டரின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனுவில் கொடுத்துள்ளேன். Ex.C5 ல் சர்வே எண்.30/1 மஜீத் என்று தான் காணப்படுகிறது என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள Ex.C4 ஆவணத்திலும் சர்வே எண்.30/1 மஜித் என்று தான் காணப்படுகிறது என்றால் சரி. Ex.C1 ஆவணத்தில் சேலம் ஜாமியா மஜீத்திற்கு பட்டா கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டா 1968 ல் கொடுக்கப்பட்டது. Ex.C2 ஆவணத்தை 2017 ல் பெற்றுள்ளேன் என்றால் சரி. Ex.C3 ஆவணத்தை நான் 2013 ம் ஆண்டு வாங்கியிருக்கிறேன் என்றால் சரி. Ex.C3 ல் எப்எம்பி பிளானில் 6.12.2021 ல் வழங்கப்பட்டுள்ளதாக உள்ளது. ஆனால் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள டவுன் சர்வே ரிஜிஸ்டர் ஒளி நகலில் 2013 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 1948 முதல் 2011 வரை சொத்தை நான் அனுபவித்து வந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். Ex.C9 நடவடிக்கை 3.11.2022 ல் வாங்கியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். 2022 க்கு முந்தைய தேதிகளில் நடவடிக்கை எடுத்ததாக காட்டுதவற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மாநில நெடுஞ்சாலையில் ரோட்டை அகலப்படுத்துவற்காக எப்போது நிலம் எடுக்கப்பட்டது என்றால் 2016 ல் நடவடிக்கை எடுப்பதற்காக நோட்டிஸ் எங்களுக்கு

கொடுக்கப்பட்டது. அந்த நோட்டிசை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 2000 லேயே ரோட்டை அகலப்படுத்துவற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வது சம்மந்தமான நோட்டிஸ் 2 முதல் 5 கோருநர்களுக்கு கொடுக்கப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. இந்த சொத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுள்ளது என்றும் அந்த காம்பவுண்ட சுவரை இடித்துவிட்டு அதற்குண்டான இழப்பீடும் 2 முதல் 5 கோருநர்களுக்கு வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. சர்வே எண்.30/1 ஜாமியா மஜீத்திற்கு சம்மந்தப்பட்டதில்லை என்றும் நான் கார்ப்பரேசன் கவுன்சிலர் என்ற முறையில் எனது பதவியை துஷ்பிரயோகம் செய்து ஆவணங்களை தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. அ பதிவேடு மற்றும் பட்டாவில் மஜீத் என்றுதான் உள்ளது என்றும் ஜாமியா மஜீத் என்று இல்லை என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலரை கைக்குள் போட்டுக்கொண்டு ஆவணங்களை பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த சொத்துக்களில் ஜாமியா மஜீத்திற்கோ வக்ப் போர்டுக்கோ சம்மந்தப்பட்தில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.30/1 நிலம் பூராவும் 2 முதல் 5 கோருநர்கள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தவறு. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் இழப்பீடு கோருவதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.